செ.வெ.எண்.16

நாள். 07.11.2017

<u>பிசான நெல் பயிருக்கு பிரதமமந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீடு செய்யவிவசாயிகளுக்கு ஆட்சியர் அழைப்பு</u>

திருநெல்வேலி மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழைநல்ல முறையில் பெய்து வருகிறது. இதைபயன்படுத்தி அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, தென்காசி, செங்கோட்டை மற்றும் கடையம், வட்டாரங்களில் நெல் நடவு பணி தீவிரமாகநடைபெற்று வருகிறது. மற்றவட்டாரங்களில் பருவமழையை பயன்படுத்தி நாற்றுவிடும் பணி நடைபெற்று வருகிறது. 2017–18 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் நடப்பு பிசான பருவத்தில் சாகுபடி செய்யப்படும் நெற்பயிரை பிரதமமந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யஅரசாணை வெளியிடப்பட்டுள்ளது. பிரதமமந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம் விவசாயிகளுக்கு எதிர் பாராமல் ஏற்படும் இழப்புகளிலிருந்து பாதுகாப்பு கொடுக்கிறது. எனவே நெற்பயிர் காப்பீடு செய்வதற்கு இதுவேதக்க தருணமாகும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் நடப்பாண்டில் பிசான பருவத்தில் 526 வருவாய் கிராமங்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் கடன் பெறும் விவசாயிகள் அவர்கள் கடன் பெறும் வங்கிகள் / தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாககட்டாயமாகப் பயிர் காப்பீடு திட்டத்தில் பதிவு செய்யப்படுவர்.

கடன் பெறா விவசாயிகள் வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், பொது சேவை மையங்கள் மற்றும் ஐசிஐசிஐலம்பார்டு அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மூலமாக விருப்பத்தின் பேரில் பதிவு செய்து கொள்ளலாம்.

விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும்போது முன்மொழிவு விண்ணப்பம், ஆதார்கார்டு நகல், வங்கி கணக்கு புத்தக நகல், சிட்டா அடங்கல் மற்றும் பதிவு விண்ணப்பம் ஆகியவற்றை இணைத்து காப்பீட்டு கட்டணத் தொகையை செலுத்திதாங்கள் நெற்பயிரை பிரதமமந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

நெல் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு ரூ.353/– பயிர் காப்பீட்டு கட்டணமாக செலுத்தினால் போதுமானது.நெல் பயிரிடும் விவசாயிகள் இத்திட்டத்தில் காப்பீடு செய்யகடைசி நாள் 30 நவம்பர் 2017.எனவே திருநெல்வேலி மாவட்டத்தில் நெல் பயிர் சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும் பிரதமமந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து பயனடையுமாறுமாவட்டஆட்சியர் திரு.சந்தீப் நந்துரி கேட்டுக் கொள்கிறார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்
திருநெல்வேலி

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி